1973 மார்ச் 7]

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the amount of robusta exported from our country to other nations?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 1971-72-ல் துவக்கப் பட்டிருக் கிறது. வெளி நாட்டிற்கு அனுப்புவதுபற்றிய செயற்குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: விலை மதிப்பும் மிகவும் ருசியுமான வாழைப் பழத்தை உண்டாக்குகின்ற இந்தக் குட்டை வாழைக்கு அந்தப் பெயர் பொருத்தம் இல்லாமல் இருக்கிறது. நெல்லிற்கு அமைச்சர்களின் பெயரை வைத்திருப்பதுபோல, இதற்கும் யாராவது ஒரு அமைச்சரின் பெயர் வைக்கப் படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அமைச்சர் பெயரை நெல்லுக்கு வைக்கவில்லை. அதைப்போல சில பெயர்கள் அவைகளுக்குப் பொருந்தியிருக் கின்றன. பொன்னி என்று ஒரு வகை நெல்லுக்குப் பெயர். இங்கே யாரும் பொன்னி என்ற பெயரில் அமைச்சர் இல்லை. பத்மா, ஜெயா என்ற பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பத்மா, ஜெயா என்று இங்கு யாரும் அமைச்சர் இல்லை. அதைப்போல பல்வேறு பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் குறிப்பிட்டுக் கேட்பது கருணை, கரிகாலன் என்பதைப்பற்றிக் கேட்கிருர்கள் என்று நினைக்கிறேன். கரிகாலன் என்ற பெயர் இங்கே யாருக்கும் இல்லை. ஆனுல், அந்தப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறேம்.

திரு. எஸ். முருகையன்: குட்டை வாழைத் திட்டத்திற்கு மத்திய அரசு எவ்வளவு தொகையை மானியமாகக் கொடுக்கிறது, மாநில அரசு எவ்வளவு தொகை மானியமாகக் கொடுக்கிறது. கடனுக மத்திய அரசு எவ்வளவு தொகை கொடுக்கிறது, மாநில அரசு எவ்வளவு தொகை கொடுக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? இந்தத் திட்டத்தை வட. ஆற்காடு மாவட்டத்தில் மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்தத் தீவிர சாகுபடித் திட்டம் தமிழக அரசு சார்பில்மட்டும் மேலே குறிப்பிட்ட மாவட்டங்களில் நடை பெறுகிறது. அதைப்பற்றித்தான் நான் சொன்னேன். உரம், பூச்சிகொல்லி மருந்துகள் இவை வாங்குவதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஆராய்ச்சி செய்து அதன் முடிவுகள் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இவை இலவசமாக அறிவிக்கப்படுகிறது. அவர்களுக்கு டெமான்ஸ்ட்ரேஷன் பிளாட்,